மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

43—

துணை மின் நிலையம்

***2721—திரு. ப. ஆடலரசன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி நகரில் தனியாக துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி நகரில் துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். 33/11 கே.வி. துணை மின் நிலையம் அமைப்பதற்குண்டான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதற்குண்டான நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவை முடிந்தவுடன், துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள்.*

முற்பகல் 10—20

திரு. ப. ஆடலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதியில், கிராமப்புறத்திற்கும், நகர்ப்புறத்திற்கும் ஒரே இடத்தில் மின்மாற்றி இணைத்து வைத்து, மின் விநியோகம் செய்யப்படுகிறது. இதனால் அங்கே மின்மாற்றியில் ஏதேனும் இடர்பாடு ஏற்பட்டால், ஒட்டுமொத்த கிராமப்புற,*

2017 மார்ச் 20]

நகர்ப்புறப் பகுதிகள் முற்றிலுமாக இருளில் மூழ்கக்கூடிய நிலை இருக்கிறது. இதைக் கருத்தில்கொண்டு, ஆறு மாதங்களுக்கு முன்பே இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டும், இன்னும் அதற்கான நிலம் கையகப்படுத்தப்படாத நிலை இருக்கிறது. அந்த நிலத்தை உடனடியாகக் கையகப்படுத்தி, அந்தப் பகுதிக்கு ஒரு துணை மின் நிலையத்தை வெகுவிரைவில் அமைத்துத்தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய அந்தப் பகுதியில்* 2 x 10 MVA *திறன் கொண்ட மின்மாற்றிகள் இருக்கின்றன. அதிலே 15* MVA *திறன் அளவுக்கு மட்டும்தான் பயன்பாடு இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற இடத்தில், மின் வெட்டு என்பது இல்லை. ஆனால் மின்மாற்றியில் ஏதாவது இடர்பாடு ஏற்பட்டால், முழுவதுமாக அங்குள்ள நகர மற்றும் கிராமப்புறப் பகுதியில் மின் தடை ஏற்படுகிறது என்று சொல்லியிருக்கின்றார்கள். அதற்காகத்தான் துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று ஏற்கெனவே கோரிக்கை வந்ததன் அடிப்படையில், நிலம் கையகப்படுத்துகின்ற பணி தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தப் பகுதியில் ஏதாவது அரசு நிலம் இருந்தால் அல்லது வேறு ஏதாவது நிலம் இருந்தால், உடனடியாக அரசுக்குத் தெரியப்படுத்துவாரேயானால், வேலையை ஆரம்பிப்பதற்கு நாங்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்போம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள்.*

திரு. ப. ஆடலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இயங்கி வருகிற அந்த மின்சார அலுவலகத்தின் அருகில் திரு. லியோ முத்து அவர்கள் இலவசமாக நிலம் வழங்கி இருக்கிறார்கள். அந்த நிலம் கொஞ்சமாக, போதாத நிலையில் இருக்கிறது. அதற்கான நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு ஏதுவாக*

அந்தச் சுற்றுவட்டாரத்தில் இடம் வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, அதை அரசு ஆவன செய்து, அந்த இடத்தைப் பெற்று, துணை மின் நிலையம் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், எங்களுடைய திருத்துறைப்பூண்டி, திருவாரூர் பகுதிகளில் குடியிருப்புப் பகுதிகளின் மேலே மின்சாரக் கம்பிகள் செல்கின்றன. அந்த மின்சாரக் கம்பிகள் ஒன்றோடொன்று உரசி, பல குடிசைகளில் தீ விபத்து ஏற்படுகின்றது. அதனால் அங்கே வாழும் விவசாயக் கூலித் தொழிலாளர்கள் எல்லாம் தங்களுடைய உடைமைகளை இழந்து, சான்றிதழ்களை இழந்து, சாலையோரங்களில் குடியிருக்க வேண்டிய நிலை இருக்கிறது. தீ விபத்துக்கு 90 சதவிகித காரணம், குடியிருப்புப் பகுதிகளின்மேலே மின்சாரக் கம்பிகள் செல்வதுதான். இதை அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, அந்த மின்சாரக் கம்பிகளை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு ஆவன செய்யுமாறு தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏற்கெனவே நிலம் வழங்கப்பட்டிருக்கின்றது; அது போதுமானதாக இல்லை; எனவே, நிலத்தைக் கையகப்படுத்தி அதனை அமைத்தால் சரியாக இருக்கும் என்று சொல்லியிருக்கின்றார்கள். 33/11 KVA துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், 2 ஏக்கர் நிலம் வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இடம், எவ்வளவு பரப்பளவு இருக்கிறது என்பது தெரியவில்லை. நாங்கள் அதைக் குறித்துக்கொண்டு, உடனடியாக அந்த இடத்தை ஆய்வு செய்கின்றோம்.

இரண்டாவதாக, குடிசைகளுக்குமேல் மின் கம்பிகள் செல்கின்ற காரணத்தால், அந்த மின் கம்பிகள் உரசி குடிசைகள் தீப்பற்றி எரிகின்ற நிலைமை உருவாகிறது என்று சொன்னார்கள். ஏற்கெனவே, அந்த வழித்தடத்தில் மின்சாரக் கம்பிகளை அமைக்கின்றபோது, குடிசைகள் இருந்திருக்காது. அந்த மின்சாரக் கம்பிகளையெல்லாம் அந்த வழியாக கொண்டுசென்றதற்குப் பிறகு அங்கே குடிசைகளை அமைத்து குடியிருக்கின்றபோதுதான் இதுபோன்ற விபத்துகள் ஏற்படுகின்றன. எனவே, மின்சாரக் கம்பிகள் ஏற்கெனவே செல்கின்ற பாதைகளில், அதற்கடியில்

2017 மார்ச் 20]

குடிசைகள் போடுவதைத் தடுத்தால்தான், இதுபோன்ற விபத்துகளைத் தடுக்கமுடியும். எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற பகுதியில், எவ்வளவு வீடுகள் இருக்கின்றன என்பதை ஆய்வு செய்து, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு அதை எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை மின்வெட்டே இல்லாத மாநிலமாக உருவாக்கிக் காட்டியிருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசைப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதியில், ராஜதானி கிராமத்தில் நீண்ட நாட்களாகக் கேட்டுக்கொண்டிருக்கிற துணை மின் நிலையம் விரைவில் அமைக்கப்பட வேண்டும். அதைப்போல, கூடலூர் நகராட்சியிலும், காமயகவுண்டன்பட்டி பேரூராட்சியிலும் இரண்டு துணை மின் நிலையங்கள் அமைத்து அந்தப் பகுதிகளைச் சீர்செய்திட அன்போடு கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பகுதிகளில் மின் தேவைக்கு ஏற்ப, துணை மின் நிலையம் தேவையென்று சொன்னால், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, அது பரிசீலிக்கப்படும். தேனியைப் பொறுத்தவரை, ஏற்கெனவே 20 துணை மின் நிலையங்கள் இருக்கின்றன. அந்தத் துணை மின் நிலையங்கள் போதும் என்று நினைக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்த இரண்டு பகுதிகளிலும் மின் தேவையை அறிந்து, தேவை இருப்பின் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*